மஹஜன பெங்குவ | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

| **கேள்விப்பத்திர இலக்கம** | **பொருள் பற்றிய விபரம்** | **அளவு** | **விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி** | **கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதி திகதி** | **கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதியும் நேரமும்** |
|---|---|---|---|---|---|
| P-087/2025 | Pop-up Personal Journal for Grade 1 Students | 100,000 | மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% (ரூ.மி.5.0இற்கு மேற்படுமானால்) | 2025.10.30ஆம் திகதி பி.ப. 2.00 மணி | 2025.10.31ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

**ஏனைய நிபந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2025.09.29ஆம் திகதி முதல் 2025.09.30ஆம் திகதி வரை** வங்கி வேலை நாட்களில் **முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை** இல:30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக மீளச் செலுத்தப்படாத **ரூ. 5,000/-** கட்டணத்துடன் குறித்த நிறுவனத்தின் கோரிக்கை கடிதமொன்றையும் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. தகுந்தவாறு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ.மி.5.00இற்கு மேற்படுமானால், மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% பெறுமதியினைக் கொண்ட விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டியதோடு, அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவை சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்/ வழங்குநர்கள் அனுப்பாணை வழங்கி 30 தினங்களுக்குள் பொருட்களை வழங்கி முடிக்க வேண்டும்.

4. மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திகதியன்று பி.ப.2.00 மணிக்குப் பின்னர் கேள்விப்பத்திரம் திறக்கப்படுவதோடு, அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் முத்திரையிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அந் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திர விவரக்கூற்றுகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட பொருளின் மாதிரியை கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும்.

6. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர், (வழங்கல்) அவர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம்** : **2439577, 2439578**
**தொலைநகல் இலக்கம்** : **2439576**
**இணையத்தளம்** : www.peoplesbank.lk
**மின்னஞ்சல்** : supplies@peoplesbank.lk